## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 4-10 - ஒன்றும் தேவும்[1]
## ('ஸ்ரீமந் நாராயணனே பரதேவதையாகையால் மற்ற தெய்வங்களை விட்டு அவனையே பற்றுங்கள்' என்று அறுதியிட்டுப் பேசுதல்)

3106 * ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் * யாதும் இல்லா
அன்று * நான்முகன் தன்னொடு * தேவர் உலகோடு உயிர் படைத்தான் **
குன்றம் போல்மணி மாட நீடு * திருக்குருகூர் அதனுள் *
நின்ற ஆதிப் பிரான் நிற்க * மற்றைத்[2] தெய்வம் நாடுதிரே 1

3107 நாடி நீர் வணங்கும் தெய்வமும் * உம்மையும் முன் படைத்தான் *
வீடில் சீர்ப் புகழ் ஆதிப் பிரான் * அவன் மேவி உறை கோயில் **
மாட மாளிகை சூழ்ந்தழகாய * திருக்குருகூர் அதனைப் *
பாடியாடிப் பரவிச் சென்மின்கள் * பல்லுலகீர்! பரந்தே 2

3108 பரந்த தெய்வமும் பல்லுலகும் படைத்து * அன்றுடனே விழுங்கி *
கரந்துமிழ்ந்து கடந்திடந்தது கண்டும் * தெளியகில்லீர் **
சிரங்களால் அமரர் வணங்கும் * திருக்குருகூர் அதனுள் *
பரன் திறமன்றிப் பல்லுலகீர்! * தெய்வம் மற்றில்லை பேசுமினே 3

3109 பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் * பிறர்க்கும்
நாயகன் அவனே * கபால நன் மோக்கத்துக் கண்டு கொண்மின் **
தேச மாமதிள் சூழ்ந்தழகாய * திருக்குருகூர் அதனுள் *
ஈசன் பாலோர் அவம் பறைதல் * என்னாவது இலிங்கியர்க்கே? 4

3110 * இலிங்கத்திட்ட புராணத்தீரும் * சமணரும் சாக்கியரும் *
வலிந்து[3] வாது செய்வீர்களும் * மற்று நுந்தெய்வமுமாகி நின்றான் **
மலிந்து செந்நெல் கவரி வீசும் * திருக்குருகூர் அதனுள் *
பொலிந்து நின்ற பிரான் கண்டீர் * ஒன்றும் பொய் இல்லை
போற்றுமினே 5

3111 போற்றி மற்றோர் தெய்வம் * பேணப் புறத்திட்டு * உம்மை இன்னே
தேற்றி வைத்தது * எல்லீரும் வீடு பெற்றால் உலகில்லை என்றே **
சேற்றில் செந்நெல் கமலம் ஓங்கு * திருக்குருகூர் அதனுள் *
ஆற்ற வல்லவன் மாயம் கண்டீர் * அது அறிந்தறிந்தோடுமினே 6

3112 ஓடி ஓடிப் பல பிறப்பும் பிறந்து * மற்றோர் தெய்வம்
பாடி ஆடிப் பணிந்து * பல்படிகால் * வழியேறிக் கண்டீர் **

[1] இது கோவில் திருவாய்மொழி
[2] மற்றெத்
[3] மலிந்து

கூடி வானவர் ஏத்த நின்ற * திருக்குருகூர் அதனுள் *
ஆடு புட்கொடி ஆதி மூர்த்திக்கு * அடிமை புகுவதுவே 7

3113 புக்கடிமையினால் தன்னைக் கண்ட * மார்க்கண்டேயன் அவனை *
நக்க பிரானும் அன்று உய்யக் கொண்டது * நாராயணன் அருளே **
கொக்கலர் தடந்தாழை வேலித் * திருக்குருகூர் அதனுள் *
மிக்க ஆதிப் பிரான் நிற்க * மற்றைத் தெய்வம் விளம்புதிரே 8

3114 விளம்பும் ஆறு சமயமும் * அவையாகிய மற்றும் தன் பால் *
அளந்து காண்டற்கரியனாகிய * ஆதிப் பிரான் அமரும் **
வளங்கொள் தண்பணை சூழ்ந்தழகாய * திருக்குருகூர் அதனை *
உளங்கொள் ஞானத்து வைம்மின் * உம்மை உய்யக் கொண்டு
போகுறிலே 9

3115 உறுவதாவது எத்தேவும் * எவ்வுலகங்களும் மற்றும் தன் பால் *
மறுவில் மூர்த்தியோடொத்து * இத்தனையும் நின்ற வண்ணம் நிற்கவே **
செறுவில் செந்நெல் கரும்பொடோங்கு * திருக்குருகூர் அதனுள் *
குறிய மாணுருவாகிய * நீள் குடக் கூத்தனுக்கு ஆட்செய்வதே 10

3116 * ஆட்செய்த ஆழிப் பிரானைச் சேர்ந்தவன் * வண்குருகூர் நகரான் *
நாட்கமழ் மகிழ் மாலை மார்பினன் * மாறன் சடகோபன் **
வேட்கையால் சொன்ன பாடல் * ஆயிரத்துள் இப்பத்தும் வல்லார் *
மீட்சியின்றி வைகுந்த மாநகர் * மற்றது கையதுவே 11

**அடிவரவு:** ஒன்று நாடி பரந்த பேச இலிங்க போற்றி ஓடி புக்கு விளம்பு
உறு ஆட்செய் கையார்